( Chapter XXIII Code of Criminal Procedure.)

-------

IN THE COURT OF **DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, THIRUCHULI**

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | C.C. 257/2021 |
| Deposition of witness for | :: | Pw.6 |
| Name | :: | வனிதா |
| Father's Name | :: | க/பெ.ராமச்சந்திரன் |
| Village | :: | |
| Taluk | :: | |
| Caste | :: | |
| Calling | :: | |
| Religion | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23 day August of 2022

---

மு.வி

1. நான் தற்போது கம்பாளி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகள் மற்றும் ஆஜர் எதிரிகள் அனைவரையும் தெரியும். அவர்களும் கம்பாளி கிராமத்தை சேர்ந்தவர்கள். கடந்த 2018ம் வருடம் ஒரு நாள் காலையில் மாமனார் தனுஷ்கோடி என்பவர் உடைவளம் வயக்காட்டில் தண்ணீர் பாய்ச்சிக்கொண்டிருந்தார். அந்த தண்ணீர் பாய்ச்சும் விவகாரம் காரணமாக ஆறுமுகம், மற்றும் எனது மாமனார் தனுஷ்கோடி இடையில் வாய் தகராறு ஏற்பட்டது. அதை எனது

மாமனார் பெரிய விசயமாக எடுக்கவில்லை. பின்னர் எனது மாமனார் வீட்டிற்கு வந்தபோது அவருக்கு காலில் சிராய்ப்பு காயம் இருந்தது. பின்னர் திருச்சுழி அரசு மருத்துமனைக்கு சென்றுவிட்டு திரும்ப வீட்டிற்கு வந்துவிட்டார். பின்பு அன்றே மாலை 7.30 மணியளவில் என் கணவர் ராமச்சந்திரன், கொழுந்தன்கள் பூமி, முத்துராமன், எனது மாமியார் இருளாயி, நதியா, ஆகியோர் சாப்பிட்டு கொண்டிருந்தோம். அப்போது ஆறுமுகம், சங்கிலி, நாகன், பாக்கியராஜ், ராஜேந்திரன், முத்துமாணிக்கம், சேதுபதி ஆகியோர் எங்களது வீட்டிற்கு முன்பு வந்து வேல்கம்பால் நாகன் என்பவர் எனது மாமனார் தனுஷ்கோடியை மூக்கில் வெட்டிவிட்டார். ஆறுமுகமும், சங்கிலியும் கம்பால் எனது மாமனாரை கையில் அடித்துவிட்டார்கள். பின்பு எனது மாமியார் இருளாயி வெளியில் வந்தபோது நாகன், சங்கிலி, ராஜேந்திரன் ஆகியோர் சேர்ந்து எனது மாமியார் இருளாயி வயிற்றில் எத்திவிட்டார். எனது கணவர் ராமச்சந்திரனை ராஜேந்திரனும், பாக்கியராஜும் வேல்கம்பால் தலையில் வெட்டிவிட்டார்கள். ராஜேந்திரன் வெட்டினார், பாக்கியராஜ் கல்லால் அடித்தார். பின்னர் எனது கொழுந்தன் முத்துராமனை முத்துமாணிக்கம், சேதுபதி ஆகியோர் தலையில் வேல்கம்பால் வெட்டி காயப்படுத்தினார்கள்.

2. பின்னர் கொழுந்தன் பூமிநாதனை பாக்கியராஜ், ராஜேந்திரன் ஆகியோர் சேர்ந்து வேல்கம்பால் தலையில் வெட்டிவிட்டார்கள். எங்களுக்கு 5 குழந்தைகள் உண்டு அந்த குழந்தைகளை வைத்துக் கொண்டு நாங்களும் வெளியே வரமுடியவில்லை. ராக்கம்மாள், முத்து என்பவர்கள் வந்து சத்தம் போட்டார்கள். அதன்பிறகு தான் எதிரிகள் அனைவரும் கிளம்பி சென்றார்கள். சண்டை ஆரம்பத்திலேயே மாட்டு வண்டியை குறுக்கே நிறுத்திவிட்டார்கள். நாங்கள் செல்வதற்கு அதுதான் பாதை. மின்சப்ளையை துண்டித்தும் விட்டார்கள். பின்னர் இந்த சம்பவத்தை சோலார் வெளிச்சத்தில் பார்த்தோம். பின்னர் 108 ஆம்புலன்ஸை வரவழைத்து ராமச்சந்திரன், முத்துராமன், மாமியார் இருளாயி, மாமனார் தனுஷ்கோடி ஆகியோர் ஆம்புலன்ஸிலும், எனது கொழுந்தன் பூமியை அருகில் வசிக்கும் ஒரு நபர் மூலம் இருசக்கர வாகனத்திலும், மருத்துவமனைக்கொண்டு சென்று நரிக்குடி அரசு மருத்துமனைக்கு சென்று அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு

சென்று அனைவரும் 1மாதத்திற்கு மேல் அருப்புக்கோட்டை அரசு மருத்துமனையில் சிகிச்சையில் இருந்தார்கள். நானும், எனது கொழுந்தன் மனைவி நதியா ஆகியோர் மட்டும் 5 குழந்தைகளை வைத்துக் கொண்டு ஊரில் இருந்தோம். போலீசார் விசாரணையிலும் இதைதான் சொன்னேன்.

எ.த.கு.வி.

3. இந்தவழக்கு சம்பந்தமாக எவ்வாறு சாட்சியம் அளிக்கவேண்டும் என்று போலீசாரும், வழக்கறிஞரும் எனக்கு ஞாபகப்படுத்தினார்கள் என்றால் சரிதான். அவர்கள் இருவரும் எங்களுக்கு சொல்லிக்கொடுக்காவிட்டார் மேற்படி விஷயங்கள் தெரியாது என்றால் சரியல்ல. மேற்படி நடந்த விபரம் தெரியும். மேற்படி விபரம் அவர்கள் சொல்லிக்கொடுக்காவிட்டால் தெரியாது என்றால் சரியல்ல. பாக்கியராஜ் என்பவர் தனுஷ்கோடியின் இடது கை, மற்றும் வலது மணிக்கட்டில் அடித்து காயப்படுத்தியதாக போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். பாக்கியராஜ், சங்கிலி ஆகியோர் எனது மாமியார் இருளாயியை அடித்து காயப்படுத்தினார்கள் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். பாக்கியராஜ் என்பவர் வேல்கம்பை வைத்து ராமச்சந்திரனை தலையில் அடித்து ரத்த காயம் ஏற்படுத்தினார் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுளேன். ராஜேந்திரன் என்பவர் வேல்கம்பை கொண்டு பூமிநாதனை இடது பக்க தலையில் வெட்டி ரத்த காயம் ஏற்படுத்தினார் என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். நான் பார்க்கும்போது மேற்படி சம்பவங்கள் நடந்தது தான் என்றால் சரிதான்.

4. எனது வீடு காரியாபட்டி தாண்டி உள்ள ரோட்டு பகுதியில் உள்ளது என்றால் சரியல்ல. என்ன தேதி, என்ன கிழமையில் சம்பவம் நடந்தது என்று எனக்கு தெரியாது. எனது மாமனாருக்கு காலையில் ஏற்பட்ட சம்பவத்தில் சிறு காயங்கள் இருந்தது. காலையில் ஏற்பட்ட சம்பவம் ஆறுமுகம் அவரது வயக்காட்டிற்கு தண்ணீர் பாய்ச்சியபோது எனது மாமனார் கேட்டதால் ஏற்பட்டது என்றால் சரிதான். எதிரி ஆறுமுகம் அவரது வயக்காட்டிற்கு தண்ணீர் பாய்ச்சும்போது எனது மாமனார் குறுக்க தண்ணீர் பாய்ச்சியதால்தான் பிரச்சனை என்றால் சரிதான். மேற்படி வழக்கு சம்பந்தமாக

நான் காவல் நிலையம் செல்லவில்லை. சம்பவம் நடக்கும்போது தகவல் சொல்லி போலீசார் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள். போலீசார் சம்பவ இடத்திற்கு வந்துதான் எதிரிகளையும், எங்களையும் அனுப்பிவைத்தார்கள் என்றால் சரியல்ல. எங்கள் வீட்டு ஆண் மக்கள் மருத்துவமனைக்கு சென்றுவிட்டார்கள். எதிரிகள் வாதிதரப்பில் தாக்கிவிட்டார்கள் என்று காவல் நிலையம் சென்று புகார் கொடுத்த விபரம் எனக்கு தெரியாது. எதிரிகள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததால்தான் போலீசார் வந்தார்கள் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு காயம் கிடையாது. மேற்படி சம்பவம் அனைத்தும் எனது மாமனார் வீட்டிற்குள் நடந்தது என்றால் சரிதான். நான் சொல்வது போல், சொன்ன நாள், சொன்ன தேதியில் சம்பவத்தை பார்க்கவில்லை என்றாலும், எனது உறவினர்களுக்கு ஆதராவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை பார்க்காததால்தான் ஏற்பட்ட காயங்களை மாற்றி, மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தையும் மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சொன்ன நாள், சொன்ன தேதியில் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

( Chapter XXIII Code of Criminal Procedure.)

-------

IN THE COURT OF **DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, THIRUCHULI**

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | C.C. 257/2021 |
| Deposition of witness for | :: | Pw.5 |
| Name | :: | நதியா |
| Father's Name | :: | க/பெ. முத்துராமன் |
| Village | :: | |
| Taluk | :: | |
| Caste | :: | |
| Calling | :: | |
| Religion | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23 day August of 2022

---

மு.வி

1. நான் தற்போது கம்பாளி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர். ஆஜர் எதிரிகளையும் மற்றும் வழக்கின் எதிரிகளையும் தெரியும். கடந்த 2018ம் வருடம் நவம்பர் 21ம் தேதி எனது மாமனார் தனுஷ்கொடி வயக்காட்டில் தண்ணீர் பாய்ச்சுவது சம்பந்தமாக வயக்காட்டில் எனது மாமனாரை ஆறுமுகம் என்பவர் வயலுக்குள் அடித்து போட்டுவிட்டு வீட்டிற்கு சென்றுவிட்டார்கள். வேறு ஒருத்தன் மூலமாக தகவல் தெரிந்து நாங்கள் போய்

எங்களது மாமனாரை அழைத்துவந்தோம். எனது மாமா சண்டை வேண்டாம் இத்துடன் விட்டுவிடலாம் என்று சொல்லிவிட்டார். நாங்கள் காட்டு வேலைக்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வந்து சாப்பிட்டு கொண்டிருக்கும்போது இரவு 7.00 மணியளவில் கரண்டை அமத்திவிட்டு மாட்டு வண்டிகளை எனது வீட்டு முன் நிறுத்திவிட்டு சத்தம் இல்லாமல் ஆறுமுகம், சங்கிலி, நாதன், பாக்கியராஜ், ராஜேந்திரன் ஆகியோர் கம்பு, வேல்கம்பு, கல், ஆகியவற்றை வைத்து எனது மாமாவை மூக்கில் வெட்டி இடது கையை ஒடித்துவிட்டார்கள். எனது அதே வேதனையில் கிடந்து இறந்துவிட்டார். நாங்கள் வைத்தியம் பார்த்து எங்களால் காப்பாத்த முடியவில்லை. எனது அத்தை இருளாயியை பாக்கியராஜ், ஆறுமுகம், நாதன், ஆகியோர் கம்பை வைத்து அடித்து வயிற்றில் மிதித்து அடித்துவிட்டு சென்றுவிட்டார்கள். எனது கணவர் முத்துராமு, எனது பெரியமாமா ராமச்சந்திரன், எனது கொழுந்தன் பூமிநாதன் ஆகியோர்களை அடித்துவிட்டார்கள். எனது கணவர் முத்துராமுவை முத்துராமலிங்கம் மற்றும் சேதுபதி வேல்கம்பால் இடது பக்க தலையில் வெட்டிவிட்டார், இடது கையில் வீக்க காயம் ஏற்பட்டது. கையில் கட்டு போட்டிருந்தார்.

2. எனது பெரியமாமா ராமச்சந்திரனை ராஜேந்திரன் மற்றும் ஆறுமுகம் கல்லை விட்டு எறிந்து தலையில் காயப்படுத்திவிட்டார்கள், தோள்பட்டையிலும் காயப்படுத்தினார்கள். எனது கொழுந்தன் பூமிநாதனை பாக்கியராஜ் மற்றும் ஆறுமுகம் ஆகியோர் வேல்கம்பை வைத்து தலையில் வெட்டி, ரத்த, ரத்தமாக கக்கி மயங்கி விட்டார். எனது பெரியமாமாவையும், எனது மாமனாரையும் ஆம்புலன்ஸ் மூலம் நரிக்குடி சென்று பின்னர் மேல் சிசிக்சைக்காக அருப்புக்கோட்டை அரசு மருத்துமனைக்கு அழைத்துச் சென்றார்கள். பின்னர் எனது கணவர், கொழுந்தன், எனது மாமியாரை நாங்கள் ஊரில் இருந்த தனியார் வாகனத்தின் மூலம் அருப்புக்கோட்டை அரசு மருத்துமனைக்கு கொண்டு சென்றோம். எல்லோரும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டார்கள் நானும், எனது மச்சான் மனைவி மட்டும் மற்றவர்களை கவனித்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள். வீட்டில் கிடந்த ரத்தத்தை எல்லாம் பார்த்துவிட்டு சென்றார்கள்.

எ.த.கு.வி.

3. எதிரிகள் எங்கள் வயக்காட்டை அடைத்ததால்தான் பிரச்சனை. கிராமத்தில் வயக்காட்டை குறுக்கால் அடைக்கும் பழக்கம் இல்லை என்றால் சரிதான். அவர்,அவர் வயக்காட்டிற்கு அவர்கள் தண்ணீர் பாய்ச்சுவது வழக்கம். எதிரி ஆறுமுகத்திற்கு ஒரு மரக்கால் இடம் உள்ளது என்றால் தெரியாது. எங்களுக்கு 1 ஏக்கர் வயக்காடு உள்ளது. எதிரி ஆறுமுகம் அவரது வயக்காட்டிற்கு நாத்து வாடிவிடும் என்று தண்ணீரை பாச்சிய போது எனது மாமனார் கேட்டதால் பிரச்சனை என்றால் சரிதான். வயக்காட்டில் எனது மாமனார் மட்டும் தான் இருந்தார். வேறு யாரும் இல்லை. எதிரி ஆறுமுகத்தை எங்கள் தரப்பை சேர்ந்தவர்கள் அடித்துவிட்டதால் பிரச்சனை என்று எனது ஊரைச் சேர்ந்த ஒரு சின்ன பையன் தகவல் சொன்னான். மேற்படி சிறுவன் ஆறுமுகத்தின் பையன் ஆவான். எங்கள் வீட்டில் சூரிய வெளிச்சம் இருந்ததால் எனக்கு வீட்டிற்கு வெளியே அடித்த விபரம் தெரியும். எங்கள் வீட்டில் நடந்த சண்டை ஊரில் யாருக்கும் தெரியாது.

4. நான் முதல் முதலில் வீட்டை விட்டு வெளியே வந்து பார்க்கும்போது எனது மாமனாருக்கும், மாமியாருக்கும் காயம் இருந்தது. அதற்கு முன்பாக என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் தெரியாது. எனது கணவர், மாமனார், மாமியார் மீது எதிரி நாதன் புகார் கொடுத்து ஒரு வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. போலீசார் வந்து வீட்டிலுள்ள ரத்தத்தை பார்த்தார்கள் என்று நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். பூமிநாதன் ரத்தத்தை கக்கினார் என்ற விபரத்தையும் போலீசார் விசாரணையீல் நான் சொல்லியுள்ளேன். அதேபோல் ஆறுமுகம் என்பவர் ராமச்சந்திரனை அடித்து காயம் ஏற்படுத்தியதாக நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். நான் வைத்தியம் பார்த்தும் எனது மாமனார் பலனிற்றி இறந்துவிட்டார் என்ற விஷயத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். பாக்கியராஜ் என்பவர் அடித்ததில் இருளாயி என்பவர் வலது கை மணிக்கட்டில் எழும்பு முறிவு ஏற்பட்டது என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். முழு பிரச்சனைக்கும் காரணம் வயக்காட்டில் நடந்த முதல் பிரச்சனை என்றால் சரிதான்.

5.நான் சொல்வது போல் சொன்ன நாள், சொன்ன தேதியில் சம்பவத்தை பார்க்கவில்லை என்றாலும், சம்பவத்தை பார்க்காததால் யார், யாரை அடித்தார்கள் என்று மாற்றி, மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எந்த, எந்த இடத்தில் யார், யாரை அடித்தார்கள் என்று என்னால் சொல்லமுடியவில்லை என்றால் சரியல்ல. என்னை எந்த போலீசார் விசாரித்தார்கள் என்றால் நரிக்குடி சார்பு ஆய்வாளர் விசாரித்தார். நான் சொல்வது போல் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த சம்பவத்தை நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. எனது கணவரின் ஆலோசனைப்படி தனி வழக்கறிஞர் நியமித்து அவரது ஆலோசனையின் படி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.